செ.வெ.எண்:27/ஆகஸ்ட்/2021 நாள்:09.08.2021

**செய்தி வெளியீடு**

--------------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திருச்சிராப்பள்ளி கலையரங்கில் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டத்தினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் அவர்கள் ஆகியோர் இன்று(09.08.2021) துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் தொடர்புடைய மாவட்டங்கள் மற்றும் தொகுதிக்குத் தேவையான பள்ளிக்கூடம், மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான கட்டடங்கள், பாலங்கள், சாலை அமைத்தல், தடுப்பணை கட்டுதல், சாலைகளை அகலப்படுத்தி அமைத்தல், புதிய சாலைகள் அமைத்தல், சுற்றுச்சாலை அமைத்தல், விபத்துகளை தடுக்கின்ற வகையில் சாலைகள் அமைப்பை உருவாக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் மீது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகியவற்றில் தலைமைப்பொறியாளர்கள், விளக்கம் அளித்தனர். மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி அலுவலர்கள், பொறியாளர்கள், பணிகளை மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும். பணிகளை தரமாகவும், அதே சமயத்தில், விரைவாகவும் முடித்திட வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், சென்னை-கன்னியாகுமரி தொழிற் தடத் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு.கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு.,இ.ஆ.ப.அவர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ்,இ.ஆ.ப., மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் - திரு.அ.சௌந்திரபாண்டின் (இலால்குடி), திரு.எஸ்.ஸ்டாலின் குமார் (துறையூர்), திரு.ந.தியாகராஜன் முசிறி, திரு.எம்.பழனியாண்டி (ஸ்ரீரங்கம்), திரு.எஸ்.இனிகோ இருதயராஜ் (திருச்சிராப்பள்ளி கிழக்கு), திரு.எஸ்.கதிரவன் (மணச்சநல்லூர்), திரு.ப.அப்துல் சமது (மணப்பாறை), திரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை),திரு.மா.சின்னதுரை (கந்தர்வக்கோட்டை) திரு.அன்பழகன் (தஞ்சாவூர்), திரு.கே.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), திரு.என்.அசோக்குமார் (பேராவூரணி), திரு.எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), திரு.பூண்டி கே.கலைவாணன் (திருவாரூர்), திரு.ஜெ.முகமது ஷாநவாஸ் (நாகப்பட்டினம்), திரு.வி.பி.நாகை மாலி (கீழ்வேளூர்), திரு.நிவேதா எம்.முருகன் (பூம்புகார்) திரு.பன்னீர் செல்வம் (சீர்காழி), திரு.எஸ்.ராஜ்குமார் (மயிலாடுதுறை) மற்றும் தலைமைப்பொறியாளர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**